PUTHIYA THALAIMURAI FOUNDATION
(A People-based movement working for Youth Development, Healthcare and Rural Education - One of the Largest NGOs in India)

ISRB EXPO FORUM™
Indian Small & Rural Business Exposition Forum
(A Unit of Puthiya Thalaimurai Foundation)
(A National Initiative to Promote Small & Rural Businesses)

SRM INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY
Deemed to be University u/s 3 of UGC Act, 1956

# ஏற்றுமதி தொழில் வாய்ப்புகள் - உலக சந்தையில் வேளாண்மை விளை பொருட்கள் & மதிப்புக் கூட்டப்பட்ட உணவுப் பொருட்களுக்கான வியாபாரம்

## இரண்டு நாள் கருத்தரங்கம் - ஜூலை 16 & 17, 2022, செங்கல்பட்டு



முனைவர். கே.எஸ்.கமாலுதீன், நிர்வாக இயக்குநர், Blue Bharath Exim Pvt. Ltd., சென்னை அவர்கள் கருத்தரங்கத்தினை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்த காட்சி




சிறப்பு விருந்தினர்கள் மேடையில் வீற்றிருந்த காட்சி

மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் என்ற மூன்றில், முதலில் குறிப்பிடப்படும் உணவு தான் மிகவும் முக்கியம் பெறுகின்றது. உணவு இல்லையென்றால் மனிதனால் உயிர்வாழ முடியாது. விவசாயி "சேற்றில் கால் வைத்தால்தான், நாம் சோற்றில் கைவைக்க முடியும்". "தாளாற்றி தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தல் பொருட்டு" என விவசாயத்தின் மகத்துவத்தை திருவள்ளுவர் கூறுகிறார்.

விவசாயத்தை முதன்மைபடுத்தும் விதமாக வேளாண்மை விளைபொருட்களை மதிப்புக்கூட்டி ஏற்றுமதி செய்து இந்திய நாட்டின் பொருளாதாரத்தை விரிவுபடுத்தும் நோக்கத்துடன், புதிய தலைமுறை அறக்கட்டளையின் ஐ.எஸ்.ஆர்.பி.எக்ஸ்போ மன்றம், புதுயுகம் தொலைக்காட்சி மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் பொத்தேரியில் உள்ள எஸ்.ஆர்.எம். தொழில்நுட்பக்கல்லூரியும் இணைந்து **(ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் - உலக சந்தையில் வேளாண்மை விளை பொருட்கள் & மதிப்புக் கூட்டப்பட்ட உணவுப் பொருட்களுக்கான வியாபாரம்)** குறித்த இரண்டு நாள் கருத்தரங்கம் பொத்தேரி எஸ்.ஆர்.எம். தொழில்நுட்பக்கல்லூரியில் உள்ள முனைவர். டி.பி.கணேசன் அரங்கம் மினி ஹால் –1 இல் ஜூலை 16 & 17, 2022 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது.



**ஏற்றுமதி தொழில் தொடங்க வேண்டும் என்றால் முதலில் கீழ்கண்ட விசயங்களில் தெளிவு பெற வேண்டும். என்ன பொருளை ஏற்றுமதி செய்யப் போகிறீர்கள், அந்த பொருளுக்கு எந்த நாட்டில் தேவை அதிகம் இருக்கிறது என்பதை அறிந்து தொழிலை தொடங்க வேண்டும்.**

ஜூலை 16, 2022 அன்று காலை 9.30 மணியளவில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது. புதிய தலைமுறை அறக்கட்டளையின் துணைப் பொது மேலாளர் – திட்டங்கள் **பொ. கணேசன்** அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அதனைத்தொடர்ந்து புதிய தலைமுறை அறக்கட்டளையின் செயலாளர் **து.வே.வெங்கடகிரி** அவர்கள் நிகழ்ச்சியின் நோக்கம், சிறப்பு விருந்தினர்கள் பற்றிய அறிமுகம் மற்றும் அறக்கட்டளையின் திட்டங்கள், செயல்பாடுகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். அடுத்ததாக எஸ்.ஆர்.எம். தொழில்நுட்பக்கல்லூரியின் விளையாட்டுத்துறை ஆலோசகர் **எஸ்.எம். நந்தகோபால்** அவர்கள் பேசுகையில் அறக்கட்டளையின் பணிகள் குறித்தும் ஒரு சிறிய அணியை (குழு)வை வைத்துக்கொண்டு மிகச்சிறப்பாக நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருக்கும் அறக்கட்டளைக்கு தன்னுடைய பாராட்டுதல்களை தெரிவித்துக் கொண்டார். அவரைத் தொடர்ந்து நிகழ்ச்சியின் பயிற்சியாளர் **முனைவர். கே.எஸ்.கமாலுதீன்,** நிர்வாக இயக்குநர், Blue Bharath Exim Pvt. Ltd., சென்னை அவர்கள் பேசுகையில் ஏற்றுமதி தொழில் குறித்தும் நிறுவனத்தை பதிவு செய்யும் முறைகள் மற்றும் புதிய தலைமுறை அறக்கட்டளையோடு தன்னுடைய பயணத்தையும் மகிழ்வோடு எடுத்துரைத்தார்.

அதன் பிறகு சிறப்பு விருந்தினர் **முனைவர். எம். ஜவஹர்லால்,** டீன், எஸ்.ஆர்.எம். விவசாய தொழில்நுட்பக்கல்லூரி, அச்சரப்பாக்கம் பேசுகையில் விவசாய விளைபொருட்களைன் இன்றைய தேவை மற்றும் அதனை மதிப்புக்கூட்டி சந்தைப்படுத்துவதன் மூலம் ஏற்றுமதி தொழிலில் ஈடுபட்டால் நிச்சயம் வெற்றி அடையலாம் என்றும் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களுக்கு உலகச்சந்தையில் தேவை அதிகம் இருக்கிறது, புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இங்கு வந்திருக்கும் பங்கேற்பாளர்கள் ஏற்றுமதி தொழிலில் ஈடுபட்டால் நிச்சயம் வெற்றி அடையலாம் என்றும் கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

அதன் பின்னர் சிறப்பு விருந்தினர் **முனைவர். பி.சுபஸ்ரீ நடராஜன்,** டீன், College of Management, எஸ்.ஆர்.எம்,. தொழில்நுட்பக்கல்லூரி அவர்கள் தனது துவக்க உரையில் தான் நிர்வாகம் குறித்த துறையில் பணியாற்றினாலும் தனக்கு வேளாண்மை விளை பொருட்கள் குறித்த துறையில் நண்பர்களோடு ஏற்பட்ட அனுபவத்தை பகிர்ந்து கொண்டார். அதோடு மட்டுமல்லாமல் புதிய தலைமுறை அறக்கட்டளை இன்று ஏற்பாடு செய்திருக்கக்கூடிய 2 நாட்கள் ஏற்றுமதி தொழில் குறித்த கருத்தரங்கம் இன்றைய காலகட்டத்தில் மிகவும் அவசியமான ஒன்று என்றும் இனிவரும் காலங்களில் இதுபோன்ற தொழில்துறை சார்ந்த கருத்தரங்கங்கள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளை அதிக அளவில் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். பார்வையாளர்களை அனைவருக்கும் தன்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.


து.வே.வெங்கடகிரி


எஸ்.எம். நந்தகோபால்


முனைவர். கே.எஸ். கமாலுதீன்


முனைவர். எம். ஜவஹர்லால்


முனைவர். பி.சுபஸ்ரீ நடராஜன், டீன், College of Management, எஸ்.ஆர்.எம், தொழில்நுட்பக்கல்லூரி அவர்கள் தனது துவக்க உரையாற்றிய காட்சி


புதிய தலைமுறை அறக்கட்டளை சார்பில் சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவுப்பரிசு வழங்கப்பட்ட காட்சி.

பின்னர் சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. புதிய தலைமுறை அறக்கட்டளையின் பொது மேலாளர்–திட்டங்கள் **ச.சுரேஷ்கண்ணன்** அவர்கள் நன்றியுரை வழங்கினார். தொழில் முனைவோர் குறித்து ஒரு குட்டிக்கதையினை தனக்கே உரித்தான பாணியில் கூறி பார்வையாளர்களுக்கு உத்வேகத்தை ஏற்படுத்தினார்.

பின்னர் தேநீர் இடைவேளைக்குப்பின் பயிற்சியாளர் கமாலுதீன் அவர்கள் தன்னைப்பற்றியும் தன் நிறுவனம் குறித்தும் தான் ஏற்றுமதி துறையில் 26 ஆண்டு காலம் பெற்ற அனுபவம், இதுவரை 750க்கும் அதிகமான மாணவர்களுக்கு ஏற்றுமதி தொழில்குறித்து தனது நிறுவனத்தின் மூலம் பயிற்சி வழங்கியுள்ளேன் என்றும், ஏற்றுமதி தொழில் துவங்குவதற்கு 5 நிலைகள் உள்ளன என்றும் அவைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

- ☆ தொடக்க நிலை (Start-up)
- ☆ முன் திட்டமிடல் (Pre-Planning)
- ☆ முன்னேற்றும் மற்றும் செயல்முறை (Progress & Process)
- ☆ ஏற்றுமதி செய்யும் முறைகள் மற்றும் போக்குவரத்து (Shipping & Logistics)
- ☆ மேலாண்மை செயல்முறை (Management Process)




பார்வையாளர் HS Code குறித்த தன்னுடைய கேள்வியை பயிற்சியாளரிடம் எடுத்துரைத்த காட்சி





மேலும் பேசுகையில் நான் இங்கே ஒரு பயிற்சியாளராக வரவில்லை என் தொழிலில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் மற்றும் அவற்றால் ஏற்பட்ட தோல்விகளில் இருந்து தான் எப்படி மீண்டு எனது தொழிலில் வெற்றி பெற்றேன் என்றும் எனது அனுபவங்களை இங்கே உங்களுக்கு எடுத்துரைத்து ஒரு வெற்றிகரமான ஏற்றுமதியாளராக நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று உங்களுக்கு வழிகாட்டவே இங்கே வந்திருக்கிறேன் என்றும் ஏற்றுமதி தொழிலில் ஈடுபடும் பொழுது மிகந்த கவனத்துடன் ஈடுபட வேண்டும் என்றும் நிறையை தகவல்களை எடுத்துரைத்தார்.

ஏற்றுமதி தொழில் தொடங்க வேண்டும் என்றால் முதலில் கீழ்கண்ட விசயங்களில் தெளிவு பெற வேண்டும். என்ன பொருளை ஏற்றுமதி செய்யப் போகிறீர்கள், அந்த பொருளுக்கு எந்த நாட்டில் தேவை அதிகம் இருக்கிறது என்பதை அறிந்து தொழிலை தொடங்க வேண்டும். இந்தியாவில் பெரும்பாலும் வேளாண்மை விளைபொருட்களே அதிகம் ஏற்றுமதியாகின்றன என்றும் ஒரு நிறுவனத்தை பதிவு செய்யும் வழிமுறைகள் குறித்தும் இந்தியாவில் ஏற்றுமதி, இறக்குமதி தொழில் செய்பவர்கள் மினிசி (Exporter Code) எனப்படும் ஏற்றுமதி இறக்குமதியாளர் கோடு எண் பெற வேண்டும். இந்த எண்ணை பெறுவதற்கு www.dgft.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கும் வழிமுறைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். மேலும் பேசுகையில் சர்வதேச சந்தையில் தனது அனுபவகங்கள் தான் சந்தித்த சவால்கள், நாடுகளை தேர்ந்தெடுக்கும் வழிமுறைகள் ஒரு பொருளுக்கான HS Code ஐ கண்டுபிடிக்கும் வழிமுறைகள் மற்றும் ஏற்றுமதிக்கும் உதவும் வலைதளங்கள் https://commerce.gov.in/ <https://www.indiantradeportal.in/>) அவற்றில் தகவல்களை எப்படி தெரிந்து கொள்வது என்றும் விரிவாக எடுத்துரைத்தார். மேலும் ஏற்றுமதி தொழிலுக்கு உதவும் பல்வேறு நிறுவனங்கள் FIEO, APEDA, Spices Board, IIMM, MMA, Andhra Chamber of Commerce அவற்றின் பணிகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

ஏற்றுமதிக்கு தடைசெய்யப்பட்ட பொருட்கள் குறித்த தகவல்கள், அனுமதிக்கப்பட்ட பொருட்கள், பொருள்களை தேர்வு செய்யும் முறைகள், நாடுகளை கண்டறியும் வழிமுறைகள், இறக்குமதியாளரை (Buyer) அடையாளம் காணும் வழிமுறைகள், ஆர்டர் எடுக்கும் வழிமுறைகள் மற்றும் Shipment Process குறித்த தகவல்களையும், தான் உருவாக்கிய BAccuracy என்ற மென்பொருள் வாயிலாக நேரடியாக பயிற்சி அளித்தார். அதில் Invoice List, Packing List, Order Request போன்ற பல்வேறு அம்சங்களை தயார் செய்யும் முறைகளை ஆன்லைன் வாயிலாக விளக்கி கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

இக்கருத்தரங்கில் புதுச்சேரி, கர்நாடகா மாநிலம் சிமோகா, தமிழக மாவட்டங்களான **சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், தென்காசி, விருதுநகர், திருவள்ளூர், நாகப்பட்டினம், விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், திருநெல்வேலி, தேனி, கரூர், கன்னியாகுமரி, திருப்பூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, நாமக்கல், இராமநாதபுரம்,** உட்பட 25க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் இருந்து (சிறுதொழில் முனைவோர், விவசாயிகள், தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர், கல்லூரி பேராசிரியர்கள், கல்லூரி மாணவர்கள், பெண்கள், மற்றும் ஒய்வு பெற்ற வங்கித்துறை & அரசுத்துறைப் பணியாளர்கள்) உட்பட 180க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். ஜூலை 17, 2022 அன்று மாலை 5.30 மணியளவில் தேசிய கீதத்துடன் கருத்தரங்கம் இனிதே நிறைவு பெற்றது.

# நிகழ்ச்சியின் புகைப்படத் தொகுப்பு





















இக்கருத்தரங்கில் 10க்கும் மேற்பட்ட சிறுதொழில் முனைவோர்கள் தங்கள் பொருட்களை (அரிசி அப்பளம், மசாலா பொருட்கள், சம்பா ரவை, கோதுமை மாவு, தினை, வரகு, சாமை போன்ற பொருட்கள், வரகு லட்டு, தேன் நெல்லிக்காய், சிறுதானிய உணவுப்பொருட்கள், சுருள்பாசி லட்டு, சாக்லேட், சுருள்பாசி ஜூஸ், வரகரிசி, தினை, கருப்புக் கவுனி அரிசி, காளான் பிஸ்கேட், எனர்ஜி பானம்) STALL மூலம் காட்சிபடுத்தியிருந்தனர். பார்வையாளர்கள் ஆர்வமுடன் அனைத்து அரங்குகளையும் பார்வையிட்டு தொழில்முனைவோர்களிடம் கலந்துரையாடினர்.














புதிய தலைமுறை அறக்கட்டளை
எண்: 24, ஜி.என். செட்டி சாலை, தி.நகர், சென்னை - 600 017 | மொபைல்: 8754417500 / 308 / 338 / 322
இமெயில்: contact@ptfindia.org | வலைதளம்: www.ptfindia.org, www.isrbexpo.org